**காசு மாற்றங்கள் மற்றும் பயிற்சி ஊடாக வலது குறைந்த மக்களுக்கு உதவும் செயற்திட்டம் (திரிசவிய) - 2014**

காசு மாற்றங்கள் மற்றும் பயிற்சி ஊடாக வலது குறைந்த மக்களுக்கு உதவும் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 நவம்பர் 30 ஆம் திகதிய ரீஎவ் 013135 எல்கே ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.06 (பீ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின்படி, முன்னைய சமூக சேவைகள் அமைச்சான தற்போதைய சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் அமுலாக்கும் முகவராகவும் உள்ளது. வலது குறைந்த மனிதர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளின் ஒரு பகுதியாக வடக்கு, வடமத்திய, வடமேல் மாகாணங்களிலுள்ள ஒன்பது மாவட்டங்களில் வலது குறைந்த நபர்களிற்கான காசு மாற்றம் மற்றும் பயிற்சியை இலக்காக கொண்டிருத்தல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். அங்கக் குறைபாடுகளுள்ள நபர்களிற்கான காசுப்படி மற்றும் தொழில் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் ஆகிய இரண்டு ஆக்கக்கூறுகளை செயற்திட்டம் கொண்டுள்ளது. மானிய உடன்படிக்கையின்படி செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 336.7 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 2.59 மில்லியனானதுடன் மொத்தத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் (ஐடிஏ) நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2012 நொவம்பர் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 மார்ச் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட விரிவான நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானிய உடன்படிக்கையின் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மானியத்தின் கீழான பற்றுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(ஊ) செயற்திட்ட அமுலாக்கலிற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலிற்கிணங்க செலவினங்கள் சரியாக இணங்காணப்பட்டிருந்தனவா என்பதும்.

(எ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்க

(அ) செயற்திட்டம் 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளிற்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(உ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, பாதீட்டு ஒதுக்கீடு மற்றம் மீளாய்வாண்டு மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிக்க உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு, மதிப்பீட்டில் மேற்கொண்ட ஒதுக்கீடு | | பயன்படுத்தப்பட்ட நிதிகள் மீளாய்வாண்டில் | | பயன்படுத்தப்பட்ட நிதிகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| மானியம் | 2.59 | 336.70 | 1.18 | 155 | 1.15 | 150.9 | 1.74 | 228 |
| | 2.59 | 336.70 | 1.18 | 155 | 1.15 | 150.9 | 1.74 | 228 |

ரூபா 336.70 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 2.59 மில்லியன் மானியத்தின் மொத்த ஒதுக்கீட்டில் 67 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 228 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 1.74 மில்லியன் மாத்திரமே 2014 திசெம்பர் 31 இல் பயன்படுத்தப்பட்டிருந்ததென்று அவதானிக்கப்பட்டது. எனவே, செயற்திட்டத்தின் மிகுதிக் காலப்பகுதியான 3 மாதகாலப்பகுதியில் தாக்கமான முறையில் ரூபா 113.7 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 0.85 மில்லியன் மானியத்தின் பயன்பாட்டை கணக்காய்வில் நிராகரிக்க முடியாது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

அங்கக் குறைபாடுகளுடனான இடையூறான நபர்களிற்கான காசுப்படி மற்றும் தொழில்சார் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துதல் என்பவற்றிக்கான செயற்திட்டத்தின் இரண்டு பிரதான ஆக்கக் கூறுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி, வடக்கு வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள 09 மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 4,505 அங்கவீனமுடையோருக்காக நிதியுதவிகள் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எனினும், மீளாய்வாண்டின்

இறுதியிலுள்ளவாறு 4,434 நலனாளிகளிற்கு மட்டும் நிதி உதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) பிழையான கணக்கு இலக்கங்கள் மற்றும் வங்கி குறியீட்டு இலக்கங்கள் போன்ற காரணங்களால் நலனாளிகளின் வங்கிக் கணக்குகளிற்கு செலவு செய்யப்படாது மீளாய்வாண்டில் வரிசை அமைச்சிற்கு ரூபா 2,901,000 தொகையான ஒதுக்கப்பட்ட நிதி உதவிகள் மீளச் செலுத்தப்பட்டிருந்தென்று அவதானிக்கப்பட்டது. மேலும், மாதிரிச் செவ்வையில் 05 நலனாளிகளிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 81,000 கூட்டுமொத்தத் தொகையான நிதி உதவிகள் மீளாய்வாண்டில் தொடர்ந்தும் வங்கிகளால் மீளச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், அத்தகைய நிராகரிப்பிற்கான காரணங்கள் விசாரனை செய்யப்பட்டு கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மானிய உடன்படிக்கையின்படி, அங்கவீன நபர்களிற்கான தொழில்சார் பயிற்சி நடவடிக்கைகள் 2013 சனவரியில் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. எனினும், அத்தகைய பயிற்சி நடவடிக்கைகள் 2014 யூனிலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. அதன் விளைவாக பயிற்சி நோக்கங்களிற்கான ரூபா 228,193,680 ஆன மொத்த ஒதுக்கீட்டில் 04 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 10,819,680 தொகை மாத்திரமே 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்பட்டிருந்தது. மேலும், 300 பயிற்சியாளர்களிற்காக 18 பாடநெறிகள் இலக்கிடப்பட்டிருந்தபோதிலும் 262 பயிற்சியாளர்களிற்கே நடாத்தப்பட்டிருந்தன.

(ஈ) பயிற்சி நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின்படி நடாத்தப்பட்ட பயிற்சிப் பாட நெறிகளின் மாதாந்த முன்னேற்றம் மற்றும் அதற்காக செய்யப்பட்ட செலவீனம் தொடர்பான அறிக்கைகள் அடுத்து வரும் மாதத்தின் 20 நாட்களிற்கிடையில் செயற்திட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் பயிற்சிபாடநெறிகளுக்கிற்காக ரூபா 4,157,884 தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 06 பயிற்சி நிறுவனங்களால் அத்தகைய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.